# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **67/2016**

ஆணை எண். **116/2016**

நாள் : **01/07/2016**

திரு. சிராஜ் ஹக்,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005,

**– முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.

**– எதிர் மனுதாரர்**

சென்னை திருவல்லிக்கேணி, எண்.40, அருணாசலம் தெருவில் வசிக்கும் திரு சிராஜ் ஹக் என்பவரின் 02.02.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.02.2016 அன்று பெறப்பட்டு 67/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

<u>ஆணை</u>

ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் முதலாவது செறிவுத் திட்டத்தை ( Package I ) செயல்படுத்துவதற்காக ஈரோடு மாநகராட்சியும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கே.ஆர்.ஆர்.ஐ டாப்பிஐவி (M/S KRRI TAPI IV) நிறுவனத்தினருக்கு 20.01.2010 அன்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். மேற்படி ஒப்பந்த நிறுவனத்தில் சென்னை, திருவல்லிக்கேணி, எண். 40, அருணாச்சலம் தெருவில் வசிக்கும் திரு. சிராஜ் ஹக் என்பவர் 11.08.2011 அன்று மக்கள் தொடர்பு அலுவலராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

3. மக்கள் தொடர்பு அலுவலராகப் பணி நியமனம் செய்யப்பட்ட மனுதாரர் திரு. சிராஜ் ஹக் மேற்படி பணியுடன் ஒப்பந்த நிறுவனத்திற்கு தேவையான தொழிலாளர்களை அழைத்து வருவதிலும், பொருட்களை இடமாற்றம் செய்யும் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய மாத ஊதியம் மற்றும் பணியாளர்களை ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கியதற்காக நிலுவைத்தொகை ரூபாய் 32 இலட்சம் ஒப்பந்த நிறுவனம் தனக்கு வழங்காததால் முதன்மை பணியமர்த்துநரான (Principal employer) ஈரோடு மாநகராட்சியால் தனக்கு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து, மேற்படி மாநகராட்சியை வழங்க வலியுறுத்தி ஆணையிடுமாறு மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

3. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக ஈரோடு மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மேலும், மனுதாரரிடமும் 26.04.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஈரோடு மாநகராட்சியும் மேற்படி ஒப்பந்த நிறுவனமும் 20.01.2016 அன்று மேற்கொண்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்தக் கூறு(Clause) 9–1–ல் கீழ்காணும் வாசகத்தை பார்த்தறியமுடிகிறது:

*9–1 "The contractor shall employ the key personal named in the schedule or key personal as referred to in the contract Data to carry out functions stated in the schedule or other personal approved by the Engineer. The engineer will approve any proposed replacement or key personal only if their qualifications abilities and relevant experience are substantially equal to or better than those of the personnel listed in the schedule "*

மேலே பார்த்தறியப்பட்ட ஒப்பந்தக் கூறு வாசகத்தின்படி 20.01.2010 அன்று ஈரோடு மாநகராட்சிக்கும் ஒப்பந்த நிறுவனத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் போது அளிக்கப்பட்ட பணியாளர் விவரங்களில் மனுதாரரின் பெயர் இடம் பெற வில்லை என்றும் மனுதாரர் 11.08.2011 அன்றிலிருந்துதான் மேற்படி ஒப்பந்த நிறுவனத்தில் மக்கள் தொடர்பு அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். எனவே, மேற்படி ஒப்பந்தக் கூறு 9–1ன் படி, மனுதாரருக்கு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் முதன்மை பணியமர்த்துநராக இருந்திருந்தார் எனக் கொள்ளலாகாது என ஈரோடு மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4, ஈரோடு மாநகராட்சியும் ஒப்பந்த நிறுவனமும் 20.01.2010 அன்று செய்து கொண்ட ஒப்பந்தம் 06.08.2013 –ல் முறிவுக்கு வந்துள்ளது. பின்பு ஒப்பந்த சம்பந்தமான பிரச்சினை நடுவர் மன்ற (Tribunal) தீர்ப்புக்கும் விடப்பட்டுள்ளது 13.10.2014 நாளிட்ட தனது தீர்ப்பில், ரூபாய் 5 கோடி, மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு ஈரோடு மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. மனுதாரர் தனக்கு ஒப்பந்த நிறுவனத்தால் வழங்கப்படவேண்டிய நிலுவைத்தொகை குறித்து ஒப்பந்தம் முறிவுக்கு வந்த நாளான 06.08.2013 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ ஈரோடு மாநகராட்சிக்கு எதுவும் தெரிவிக்கவில்லை மேலும் நிலுவைத் தொகை குறித்து நடுவர் மன்றத்தின் (Tribunal) கவனத்திற்கும் கொண்டு சென்றதாகவும் தெரியவில்லை

5. மனுதாரருக்கும் ஒப்பந்த நிறுவனத்திற்குமான தொடர்பு ஈரோடு மாநகராட்சியுடனான ஒப்பந்தம் முறிவுக்கு வந்த பின்பும், சுமூகமாகவே இருந்துள்ளது. மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரின் 14.07.2014 நாளிட்ட கடிதத்தில் கீழ்காணும் நிலுவைத் தொகை விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

*" I agree that company owes you the following payment*
*Labour payment - 3 years*

*Your pending salary - 2 years*
*Material Bills - Twice deducted from your labour payment*

*Which would come around Rs. 32,00,000/-. The pending payment would be released immediately after Erode City Municipal corporation-Government of Tamil Nadu clears the payment to our company after arbitration process is over*

மேலே குறிப்பிட்ட நிர்வாக இயக்குநரின் உறுதிமொழியின் படி மனுதாரர் மேற்படி நிறுவனத்தை அணுகவேண்டுமேயொழிய ஈரோடு மாநகராட்சியை அல்ல.

6. மனுதாரர் 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (வரன்முறை படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டப்பிரிவு 21 (4) ஐ இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார் மேற்படி சட்டப்பிரிவின் கீழ்காணும் வாசகத்தினை படித்தறியலாம்.

*" In case , the contractor fails to make payment of wages within the prescribed period or makes short payment, then the principal Employer shall be liable to make payment of wages in full or unpaid the balance due, as the case may be, to the contract labour employed by the contractor and recover the amount so paid from the contractor either by deduction from any amount payable to the conotractor"*

மேற்படி சட்டப்பிரிவு மனுதாரருக்கு முழுமையாக பொருந்தக் கூடியதாக இல்லை. மனுதாரரின் பெயர் முக்கிய பணியாளர் பட்டியலில் இடம் பெறவில்லை. மேலும் மனுதாரர் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒரு துணை ஒப்பந்ததாரராகவே செயல்பட்டு வந்துள்ளார். மாநகராட்சியோடு இவருக்கு நேரடியாக எந்தவித ஒப்பந்தமும் இல்லை. மனுதாரர் துணை ஒப்பந்தப் பணியை (Sub Contract) மேற்கொண்டமைக்காக ஒப்பந்த நிறுவனம் நிலுவைத் தொகை வழங்காமைக்கு ஈரோடு மாநகராட்சி பொறுப்பேற்க இயலாது. மேலும் இந்நேர்வில் மனுதாரருக்கு முதன்மைப் பணியமர்த்துநர் ஒப்பந்த நிறுவனமேயன்றி ஈரோடு மாகராட்சி அல்ல.

7. மனுதாரருக்கும் ஒப்பந்த நிறுவனத்திற்கும் இருந்து வந்துள்ள உறவு 26.11.2014 அன்று அந்நிறுவனம் வெளியிட்ட கடிதத்திற்கும் பின்பே முறிவுக்கு வந்துள்ளது. மேற்படி தேதிக்குப் பின்னர் தான் மனுதாரரும் தனக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை குறித்து அரசு, நகராட்சி நிர்வாக இயக்குநர், ஈரோடு மாநகராட்சி இறுதியாக இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

8. மேற்படி நிகழ்வுகள் மனுதாரருக்கும் நிறுவனத்திற்கும் உள்ள பிரச்சனைகளை உறுதி செய்கிறது இந்நிகழ்வில் மாநகராட்சிக்கு எந்தவித நேரடி பொறுப்பும் இருப்பதாகத் தெரியவில்லை 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், பிரிவுகள் 7 மற்றும் 8 ல் முறைமன்ற நடுவர் அவர்களின் செயற் பணிகள் மற்றும் அதிகாரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. **மேற்படிச் சட்டப்பிரிவு 7 (b) ன் படி "உள்ளாட்சி அமைப்பின் நிதியத்திற்கு இழப்பினை ஏற்படுத்தியிருக்கின்ற முறைகேடாக இருக்கின்றவிடத்து அத்தகைய முறைகேடுகளுக்கு பொறுப்பானவர்களிடமிருந்து இழப்பினை திரும்பப் பெறுவதற்கான" செயற்பணியை முறைமன்ற நடுவர் மேற்கொள்ளலாம். மேலும் சட்டப்பிரிவு 8(3)–ல் "எழுத்து வடிவிலான முறையீடு ஒன்றில் அடங்கியுள்ள குற்றச்சாட்டில் உள்ளாட்சி அமைப்பு நிதியத்தின் இழப்பு பற்றியதாக இருக்கின்றவிடத்து, முறைமன்ற நடுவர் விசாரணையின் போது, சான்றினை சேகரித்து இழப்பினை நிச்சயிக்கலாம் மற்றும் அந்த இழப்பை ஏற்படுத்தியதற்கு பொறுப்பாகவுள்ள நபரிடமிருந்து அந்தத் தொகையினைப் பெறுவதற்கு முறைமன்ற நடுவரின் ஆணையில் பணிக்கலாம்."**

9. எனவே உள்ளாட்சி அமைப்புக்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பினை பெறுவதற்கு மட்டுமே மேற்படி பிரிவுகளின் கீழ் முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை மேற்கொள்ள இயலும். இந்நேர்வில் தனியருக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அவருடைய ஒப்பந்ததாரரால் ஏற்படுத்தப்பட்டது. தனியருக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் நிலுவைத் தொகையினை ஈரோடு மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டுமென இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிட இயலாது. மேலும் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்தையும் நேரடியாக வலியுறுத்த இயலாது.

10. இந்நேர்வில் மனுதாரர் ஈரோடு மாநகராட்சியால் பணியமர்த்தம் செய்யப்பட்ட பணியாளர் அல்ல. மனுதாரரின் முதன்மைப் பணியமர்த்துபவர் ஒப்பந்த நிறுவனமேயன்றி ஈரோடு மாநகராட்சியல்ல. மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் 14.07.2014 நாளிட்ட கடிதத்தில் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை குறித்து தெரிவித்துள்ளார் ஒப்பந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மேற்படி கடிதம் மூலம் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகைப் பற்றி தெரிவிக்கும் முன்பே, அதாவது 06.08.2013 அன்று ஈரோடு

மாநகராட்சியும் ஒப்பந்த நிறுவனமும் செய்து கொண்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஒப்பந்தம் முறிவுக்கு வந்துள்ளது. எனவே மனுதாரருக்கு அவர் துணை ஒப்பந்தகாரராக உள்ள திருவாளர்கள் கே.ஆர்.ஆர் நிறுவனம் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை [illegible] மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்த இயலாது எனத் தெரிவித்து இந்நேர்வினை முடித்து வைத்து ஆணையிடுகிறது.

11. இருப்பினும் ஒப்பந்த நிறுவனத்துடனான மனுதாரரது ஒப்பந்தம் மற்றும் நிலுவைத் தொகை குறித்து ஒப்பந்த நிறுவனத்தால் அளிக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றின் தேவையெனும் பட்சத்தில் அவ்வகையில் நீதிமன்றத்தினை அணுகி சட்டப்படி தீர்வு காண மனுதாரருக்கு எவ்வித தடையும் இல்லை எனவும் இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

திரு. சிராஜ் ஹக்,
எண். 40, அருணாச்சலம் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005,

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.